# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8082848

C

1. District மாவட்டம்: MADURAI PS: காவல்நிலையம்: V XAC Year: ஆண்டு: FIR No.: மு.த.அ. எண்: 02/2024 Date: நாள்: 20.02.2024

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as amended by PC (amendment) Act 2018.

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 15.02.2024 at about 12:00 hrs.

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 16.02.2024 at about 10:30 hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.02.2024 Time : நேரம் → 19.02.2024 at about 12:15 hrs 08:00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 20.02.2024 Time நேரம் → 09:00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 7 kms, West

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o The Assistant Engineer, TANGEDCO, Villangudi, Madurai.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. BrittoSahayarhaj (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Arockiam

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1961 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில் Driver (Rtd) (g) Address : முகவரி 34/38 Visurasapuri, 5th Street, Gnana Olipuram, Madurai-16.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. John Kennady, Foreman O/o the Asst. Engineer, Tangedco, Villangudi, Madurai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— Nil —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached Seperate Sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
மு.த.அ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 20.02.24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.02.2024 at 10:00 hrs

Name: பெயர் P.M. RAMESH PRABHU
Rank: நிலை Inspector of Police ...No. எண் ........
Vigilance & Anti Corruption Madurai

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,**

இன்று 20.02.2024-ஆம் தேதி காலை சுமார் 03.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை, ஞானஒளிவுபுரம், விசுவாசபுரி 5-வது தெருவில் கதவு எண் 34/38-ல் வசிக்கும் ஆரோக்கியம் மகன் திரு.ஆ.பிரிட்டோசகாயராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் : அனுப்புநர் ஆ.பிரிட்டோசகாயராஜ், வயது 63/2024, த/பெ. ஆரோக்கியம், 34/38 விசுவாசபுரி 5-வது தெரு, ஞானஒளிவுபுரம், மதுரை - 16. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை ஞானஒளிவுபுரம் பகுதியில் விசுவாசபுரி 5-வது தெருவில் குடும்பத்துடன் வசிக்கிறேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தனியார் நிறுவனத்தில் ஓட்டுநராக வேலைபார்த்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் மதுரை வடக்கு தாலுகா சிலையனேரி கிராமம் சர்வே எண் 24/5-ல் சங்கீத் நகர் கார்டனில் 1319.6 ச.அ. அளவுள்ள பிளாட் எண் 11-ஐ கடந்த 01.03.2023-ம் தேதியன்று விலைக்கு வாங்கி அதனை பொதும்பு சார் பதிவாளர் அலுவலக பதிவு ஆவணம் எண் 1502 / 2023-ன் கீழ் எனது பெயரில் பதிவு செய்தேன். நான் அந்த இடத்தில் வீடு கட்டுவதற்குகாக மதுரை மாநகராட்சியில் முறையாக பணம் கட்டி, அதற்கான கட்டிட வரைபட அனுமதி பெற்றுள்ளேன். அந்த மனையிடத்தில் வீடு கட்டத் திட்டமிட்டு அதற்கு தற்காலிக மின் இணைப்பு வேண்டி மதுரை விளாங்குடி மின் வாரிய அலுவலக உதவி மின் பொறியாளர் அவர்களுக்கு கடந்த 08.02.2024-ம் தேதியன்று ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தேன். அத்துடன் எனது இடத்தின் பத்திரத்திரம், மதுரை மாநகராட்சி அவ்விடத்தில் வீடு கட்டுவதற்கு எனக்கு வழங்கிய வீட்டு வரைபடத்தின் நகல், எனது இடத்தின் பட்டா, அதற்குரிய பொட்டல் வரி செலுத்திய ரசீது, எனது ஆதார் கார்டு ஆகியவற்றின் நகல்கள் மற்றும் ரூ.80 மதிப்புள்ள முத்திரை தாளில் நான் எழுதி கொடுத்த உறுதிமொழி ஆகியவற்றினை இணைத்திருந்தேன். எனது விண்ணப்பத்தின் வரிசை எண் 2000 5044 0224 208 ஆகும். நான் விண்ணப்பிக்கும்போதே அதற்காக அரசுக்கு ரூ.15,682/- கட்டணமாக செலுத்த வேண்டும் என தெரிந்து கொண்டேன். அதன் பின்னர் கடந்த 13.02.2024-ம் தேதியன்று காலை சுமார் 10.30 மணியளவில் தினமணி நகருக்கு அருகில் உள்ள விளாங்குடி மின் வாரிய அலுவலகத்திற்கு நேரில் சென்று அங்கு மாடியில் அவரது அறையில் இருந்த உதவி மின்

பொறியாளர் திரு.பிரகாஷ்தாஸ் அவர்களை சந்தித்து, தற்காலிக மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த ஆன்லைன் விண்ணப்பம் மற்றும் அது சம்பந்தமான ஆவணங்களையும் இணைத்து கொடுத்தேன். அவர் அதனை பார்வையிட்டு, அதில் கையெழுத்திட்டு, அவ்வலுவலகத்தில் இருந்த போர்மேன் திரு.ஜான் கென்னடி அவர்களை அழைத்து, எனது விண்ணப்பம் மற்றும் அத்துடன் இணைத்திருந்த ஆவணங்களை கொடுத்து, எனது இடத்தை பார்வையிட்டு வருமாறு கூறி அனுப்பி வைத்தார். அந்த சமயத்தில் நான் போர்மேன் திரு.ஜான் கென்னடி அவர்களிடம் அவரது செல்போன் எண். 98425 82644-ஐ பெற்றுக்கொண்டேன். அவர் என்னிடம் சிறிது நேரம் காத்திருக்குமாறு கூறினார். பின்பு நான் அந்த அலுவலகத்தின் மாடியில் இருந்து கீழே இறங்கிவந்து காத்திருந்தேன். பிறகு சிறிது நேரம் கழித்து திரு.ஜான் கென்னடி அவர்களுக்கு எனது செல்போன் எண். 90953 21215 என்ற எண்ணிலிருந்து அவரது செல்போனுக்கு போன் செய்து எனது இடத்தை பார்வையிட செல்லலாமா எனக்கேட்டேன். அவரும் சரியெனக் கூறி கீழே இறங்கி வந்தார். பிறகு நான் திரு.ஜான் கென்னடி அவர்களை எனது இருசக்கர வாகனத்திலேயே எனது இடத்திற்கு அழைத்துச் சென்று, எனது இடத்தை காண்பித்தேன். அவர் அதனை பார்வையிட்டு எனது இடத்திற்கு மின் இணைப்பு வழங்குவதற்கு மூன்று மின் கம்பங்கள் ஊன்ற வேண்டும் என்று கூறினார். பிறகு நானும் அவரும் அவரது அலுவலகத்திற்கு திரும்பி வந்து, AE திரு.பிரகாஷ்தாஸ் அவர்களை சந்தித்தோம். AE திரு.பிரகாஷ்தாஸ் அவர்களிடம் போர்மேன் ஜான் கென்னடி, எனது இடத்தை பார்வையிட்டதை கூறி அதற்கு மின் கம்பங்கள் ஊன்ற வேண்டும் என்று கூறினார். பிறகு திரு.ஜான் கென்னடி என்னிடம், நீங்கள் செல்லுங்கள் உங்கள் இடத்தை AE அவர்களிடம் காண்பித்து விட்டு விபரம் கூறுகிறேன். அப்போது அதற்காக பணம் கட்டினால் போதும் என்று கூறினார். எனவே அன்று மாலையில் நான் போர்மேன் திரு.ஜான்கென்னடி அவர்களை அவரது செல்போனில் தொடர்புகொண்டு AE அவர்கள் எனது இடத்தை நேரில் பார்த்துவிட்டார்களா என விசாரித்தேன். அவர் நாளைக்கு AE-யிடம் உங்கள் இடத்தை காண்பிக்கிறேன் எனக் கூறினார். பின்னர் மறுநாள் (14.02.2024) காலை சுமார் 11.00 மணிக்கு திரு.ஜான்கென்னடி அவர்களை செல்போனில் தொடர்புகொண்டு AE எனது இடத்தை பார்த்துவிட்டாரா என மீண்டும் விசாரித்தேன். அதற்கு அவர் இன்னும் பார்க்கவில்லை எனக் கூறினார். எனவே சிறிது நேரம் கழித்து விளாங்குடி உதவி மின் பொறியாளர் அலுவலகம் சென்று AE திரு.பிரகாஷ்தாஸ் அவர்களை சந்தித்து, எனது மின் இணைப்பு

சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர், உங்கள் இடத்தை இன்னும் பார்க்கவில்லை பார்த்துவிட்டு கூறுகிறேன் எனச் சொன்னார். பிறகு மீண்டும் மாலையில் திரு.ஜான்கென்னடி அவர்களை செல்போனில் தொடர்புக்கொண்டு AE எனது இடத்தை பார்த்துவிட்டாரா என விசாரித்தேன். அப்பொழுது AE இன்னும் பார்க்கவில்லை என்று தெரிவித்தார். பிறகு மறுநாள் 15.02.2024-ஆம் தேதியன்று மதியம் சுமார் 12 மணிக்கு விளாங்குடி உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்றேன். அங்கிருந்த போர்மேன் திரு.ஜான் கென்னடி அவர்களை சந்தித்து, என்னுடைய மின் இணைப்பு சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் மின் இணைப்பு பெறுவதற்காக அரசு கட்டணம் போக, தனியாக எனக்கு ரூ.20,000/- கொடுத்தால் தான் மின் இணைப்பு தரமுடியும், இல்லையென்றால் நீங்கள் அலைந்து கஷ்டபடவேண்டும், இதைப்பற்றி யாரிடமும் சொல்ல வேண்டாம் என கண்டிப்பாக கூறினார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் நான் ஓய்வு பெற்றுவிட்டேன், அதனால் பணத்தை குறைத்து கேளுங்கள் என கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர் மறுநாள் வந்து தன்னை சந்திக்கும் படி கூறினார். பின்னர் மறுநாள் 16.02.2024-ஆம் தேதியன்று காலையில் சுமார் 10.30 மணிக்கு விளாங்குடி உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்றேன். அப்போது அங்கிருந்தவர்கள் AE மீட்டிங்கிற்கு சென்று விட்டதாக கூறினார்கள். அந்த சமயத்தில் போர்மேனும் இல்லை. எனவே திரு.ஜான்கென்னடி அவர்களை செல்போனில் தொடர்புக்கொண்டு இதுசம்மந்தமாக விசாரித்தேன். அப்போது அவர் என்னிடம், நான் எனக்கு கேட்ட ரூ.20,000/-த்தை கொடுத்தால் எல்லாவற்றையும் ஜரூராக முடித்துவிடுகிறேன் என கூறினார். அதற்கு நான் அவரிடம் நான் மிகவும் கஷ்டபடுகிறேன் எனச்சொல்லி விரைவில் ஏற்பாடுகள் செய்கிறேன் எனக் கூறினேன். பிறகு எனது வீட்டிற்கு திரும்பி வந்துவிட்டேன். பிறகு சுமார் ஒரு மணிநேரம் கழித்து நான் மீண்டும் போர்மேன் திரு.ஜான்கென்னடி அவர்களை தொடர்புகொண்டு அவரது அலுவலகத்திற்கு வந்துவிட்டீர்களா உங்களை பார்க்க வேண்டும் எனக்கேட்டேன். அதற்கு அவர் தான் வெளியில் இருப்பதாக கூறிவிட்டார். பின்னர் மீண்டும் மாலை சுமார் 04.00 மணிக்கு திரு.ஜான்கென்னடி அவர்களை செல்போனில் தொடர்புகொண்டு பேசினேன். அவர் என்னிடம் தான் வெளியில் இருப்பதாக கூறி என்னை அவரது அலுவலகத்திற்கு சென்று AE அவர்களை சந்திக்கும்படி கூறினார். எனவே நான் மாலை சுமார் 04.30 மணிக்கு அவ்வலுவலகத்திற்கு சென்றேன். அப்போது போர்மேன் திரு.ஜான் கென்னடி அலுவலகத்தில் இல்லை. அங்கிருந்த AE

திரு.பிரகாஷ்தாஸ் அவர்களை சந்தித்து, எனது மின் இணைப்பு சம்பந்தமாக கேட்டேன். அவர் என்னிடம் உங்கள் இடத்தை பார்த்து விட்டேன், அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் ரூ.15,682/-ஐ ஆன்லைன் மூலம் செலுத்தி விடுங்கள் என்று கூறினார். மேலும் அவர் என்னிடம் எனது இடமான சங்கீத் நகர் கார்டன் உரிமையாளர்களால் மின்சார வாரியத்திற்கு வழங்கியுள்ள இனாம் சாசனத்தின் நகலை வரும் திங்கள் கிழமை வந்து கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். நானும் சரியென சொல்லி விட்டு, அவ்வலுவலத்திற்கு எதிரில் உள்ள ஜெராக்ஸ் கடைக்குச் சென்று அங்கிருந்த நபரிடம், மின் இணைப்பிற்கு ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டிய பணம் ரூ. 15,682/- பற்றி விபரம் கூறி அதற்கு பணம் செலுத்தும்படி கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் தன்னுடைய கட்டணத்தையும் சேர்த்து, தனது QR கோடில் ரூ. 15,900/- செலுத்தும் படி கூறினார். அதன்படி நான் எனது மொபைலிலுள்ள G Pay மூலம் அவரது QR கோடை ஸ்கேன் செய்து அவருக்கு ரூ.15,900/-த்தை செலுத்தினேன். பின்பு அவர் அரசு கட்டணம் ரூ.15,682/-த்தை செலுத்திவிட்டு அதற்கான மின் கட்டண ரசீது எண் PGCCAN 6087 38000-யை என்னிடம் கொடுத்தார். அதன் பின்னர் நேற்று 19.02.2024-ம் தேதி மதியம் சுமார் 12.15 மணிக்கு நான் மீண்டும் மின் வாரிய அலுவலகத்துக்குச் சென்று AE திரு.பிரகாஷ்தாஸ் அவர்களை அவரது அறையில் சந்தித்து, எனது இடம் அமைந்துள்ள சங்கீத் நகர் கார்டன் உரிமையாளர்களால் மின்சார வாரியத்திற்கு வழங்கியுள்ள இனாம் சாசனத்தின் நகலை அவரிடம் கொடுத்தேன். பின்பு அவரது அறையைவிட்டு வெளியே வந்தேன். அப்போது அந்த அலுவலகத்திலிருந்த போர்மேன் திரு. ஜான் கென்னடி அவர்கள் என்னை அங்கிருந்த வராண்டாவிற்கு அழைத்து சென்றார். அவரிடம் நான் எனது இடத்திற்கு மின் இணைப்பு கட்டணம் ரூ.15,682/- கட்டிய விபரத்தை கூறி, அதற்கு சீக்கிரம் மின் இணைப்பு தரும்படி கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர் நான் கேட்ட பணம் ரூ.20,000/- என்ன ஆச்சு, அதைக் கொடுத்தால் தான் வேலையைத் தொடங்க முடியும் இல்லாவிட்டால் முடியாது எனக் கூறினார். நான் அவரிடம் நான் தற்போது வேலைக்கு எதுவும் செல்லவில்லை அதனால் பணத்தை குறைத்துக் கேளுங்கள் என கேட்டுக் கொண்டேன். அதற்கு திரு.ஜான் கென்னடி, நான் கேட்ட இருபதாயிரம் ரூபாயில் நீங்கள் மூவாயிரம் ரூபாய் குறைத்துக் கொண்டு, ரூ. 17,000/- கொண்டு வந்து நாளைக்கு கொடுங்கள் நான் வேலையை உடனே ஆரம்பித்து விடுகிறேன் இல்லையென்றால் வீணாக அலைந்து கொண்டே இருக்க வேண்டும், இவையெல்லாம் நான்தான் உங்களுக்கு பார்த்து கொடுக்க

வேண்டும் என கண்டிப்பாக கூறிவிட்டார். அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே, உரிய அரசுக்கட்டணம் செலுத்திய பின்னரும், என்னிடம் ரூ.17,000/- லஞ்சம் கேட்கும் விளாங்குடி மின் வாரிய அலுவலகத்தில் போர்மேனாகப் பணியாற்றும் திரு.ஜான் கென்னடி மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் நான் தற்காலிக இணைப்பு வேண்டி ஆன்லைன் மூலம் விண்ணப்பித்த விண்ணப்பம் எண் 2000 5044 0224 208, அதற்காக அரசுக்கட்டணம் ரூ.15,682/- கட்டியதற்கான ரசீது எண் PGCCAN 6087 38000, எனது இடத்தின் கிரைய ஆவணம் எண் 1502/2023, மின்சார வாரியத்துக்கு இடத்தை எழுதிக் கொடுத்த இனாம் சாசனம் ஆவணம் எண் 915/2022, மின் வாரியத்தின் பெயரில் உள்ள பட்டா எண் 2064 ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும், போர்மேன் திரு.ஜான் கென்னடி என்னிடம் கேட்ட லஞ்சப்பணம் ரூ.17,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். எனவே, திரு.ஜான் கென்னடி மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒ-ம்) **XXXXXX** ஆ.பிரிட்டோசகாயராஜ்), 20.02.2024.

**Sir, Received the typed complaint on 20.02.2024 at 08.00 hrs, the genuineness of the complainant and the accused were verified through sources. The complainant is found to be genuine however, the integrity and antecedents of the accused is found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption wing, Chennai and I registered a case in Madurai Vigilance and Anti Corruption Cr. No. 02/2024 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.00 hrs and took up investigation. Sd./-XXXXXX (P.M. Ramesh Prabhu) 20.02.2024, Inspector of Police, V&AC, Madurai.**

**Original FIR along with original typed complaint of Tr. A. Britto Sahayaraj, Age 63, S/o. Arokiyam, 34/38, Visuvasapuri 5th Street, Gnanaolivupuram, Madurai – 16 along with copy of Online Application vide No. 2000 5044 0224 208 submitted by the complainant requesting Temporary EB Connection, Copy of Online payment receipt No. PGCCAN 6087 38000 for amount of Rs. 15,682/-, copy of Sale deed Document No.1502/2023 of Pothumbu Sub-Registrar Office and copy**

of Inam settlement Document No. 915/2022 of Arasaradi Sub-Registrar Office and copy of patta No. 2064 in the name of TANGEDCO are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

(P.M. Ramesh Prabhu)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.
20.02.2024